**<u>சுருக்கம்</u>**

பள்ளிக் கல்வி – முதுகலை ஆசிரியர் நியமனம் – வேலை வாய்ப்பக பதிவு மூப்பு அடிப்படையில் நியமனம் செய்யும் முறையை மாற்றி, எழுத்துத் தேர்வு மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பின் மூலமாக நியமனம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>பள்ளிக் கல்வி(க்யு)த் துறை</u>**

**<u>அரசாணை (நிலை) எண்.175</u>** **<u>நாள் 08.11.2011</u>**

**திருவள்ளுவர் ஆண்டு 2042**

**ஐப்பசி 22,**

படிக்க:–

அரசாணை(நிலை) எண்.290, பள்ளிக் கல்வித் (க்யு) துறை, நாள் 06.12.2007.

––––

**<u>ஆணை :–</u>**

மேலே படிக்கப்பட்ட அரசாணையில், இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் உள்ளிட்ட ஏனைய ஆசிரியர்கள் வேலை வாய்ப்பகப் பணி மூப்பு அடிப்படையில் நியமனம் செய்யப்படும் அதே முறையைப் பின்பற்றி முதுகலை ஆசிரியர்களையும் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடி நியமனம் செய்யும் போது வேலை வாய்ப்பகப் பதிவு மூப்பு அடிப்படையில் தேர்வு செய்து நியமிக்க அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. வேலை வாய்ப்பக பதிவு மூப்பு அடிப்படையில் முதுகலை ஆசிரியர் நியமனம் செய்யும் முறை குறித்து அரசு கவனமுடன் பரிசீலித்தது. முதுகலை ஆசிரியர்கள் நியமனம் எழுத்துத் தேர்வு (Written Examination) மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பு மூலமாக மேற்கொள்ளலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. இதனை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு ஆசிரியர் தேர்வு வாரியத் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,
அரசு கூடுதல் தலைமை செயலாளர்

பெறுநர்
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம்,
சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
பொதுத் துறை, சென்னை – 9
மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,
சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்